இளைஞர் குரல்
காலத்தின் தேவையாகக
கனிந்து வந்துகொண்டிருக்கிறது.
தமிழினத்தின் சோரம்போக்க
நேரம் பார்த்து வருகிறது.
மாதம் ஒருமுறை—
விலை: 60 சதம் மட்டுமே.

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 20 கார்த்திகை 16 முஹறம் 1 இதழ் 292
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 2-12-78



இளைஞர் குரல
புதிய அம்சங்கள்
புரட்சிக் கருத்துக்கள்.
தேர்தல் பற்றிய பகுப்பு ஆய்வு
விடுதலை..சள் பற்றிய வரலாறு
பிதற்றும் பிரதமருக்குப் பதில்
இளைஞர் பேரவையின்
இன்றைய நிலைப்பாடு
இவற்றைத் தாங்கி வெளிவருகிறது

மட்டுநகர், அம்பாறை, கல்முனை, பொலநறுவையில்

# ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சை

# அடுத்த ஆண்டு நடைபெறும்

## ஏனைய இடங்களில் டிச.12ல் பரீட்சை ஆரம்பமாகும்

(கொழும்பு)

சூருவளியினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, பொலனறுவ, அம்பாறை மாவட்டங்களில்ஜி.சி.ஈ. (சாதாரணதர) பரீட்சை அடுத்த ஆண்டு நடைபெறும். ஏனைய மாவட்டங்களில் திட்டமிட்டபடி டிசம்பர் 12ம் திகதி ஆரம்பமாகும்.

இவ்வாறு பதில் கல்வியமைச்சர் திரு. லயனல் ஜயதிலகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுக்காலை நடத்திய பத்திரிகையாளர் மகாநாட்டிலேயே திரு ஜயதிலகா மேற்கண்டவாறு கூறினார்.

மட்டக்களப்பு,பொலநறுவ, அம்பாறை, கல்முனை ஆகிய இடங்களிலுள்ள மாணவர்களின் வசதிக்காக அடுத்த ஆண்டு முதலாம் தவணை இறுதியில் விசேடமாக இப்பரீட்சை நடத்தப்படுமென்றும் திரு. ஜயதிலக தெரிவித்துள்ளார்.

## சூருவளியினால் 15000தொன் உணவுப் பொருள் தேசம்

### பாராளுமன்றத்தில் அமைச்சர்

(கொழும்பு)

சூருவளி, வெள்ளப்பெருக்கு ஆகியவற்றால் சீனி, மா, அரிசி உட்பட 10 முதல் 15 ஆயிரம் தொன் உணவுப் பொருட்கள் சேதமடைந்துள்ளன என்று உணவுக்கூட்டுறவு அமைச்சர் திரு எஸ். பி. ஹேரத் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

உணவு கூட்டுறவு அமைச்சுக்கான நிதிஒதுக்கீடு மீதான விவாதத்தில் பேசுகையில் அமைச்சர் மேலும் கூறியதாவது;

இந்த ஆண்டு ஒரு லட்சத்து 90 ஆயிரம் தொன் அரிசியே இறக்குமதி செய்யப்பட்டது. கடந்த ஆண்டு 5 லட்சத்து

(6-ம் பக்கம் பார்க்க)

### 1வது கிரிக்கெட் டெஸ்ட் 95 நிமிடம்மட்டுமே ஆட்டம்

பம்பாய், டிச. 1

இந்திய — மேற்கிந்திய முதலாவது டெஸ்ட் கடந்த இரவு பெய்த பெருமழை காரண

(6-ம் பக்கம் பார்க்க)

° 30 விதம் திறமை ° 55 விதம் ஜனத்தொகைவிகிதாசாரம் ° 15 விதம் பின்தங்கிய பகுதி

## பல்கலைக்கழக அனுமதி ஜனவரியில் அறிவிக்கப்படும்

### பதில் கல்வி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

இலங்கைப்பல்கலைக்கழகங்களில் அடுத்த ஆண்டில் புதிய மாணவர்கள் 30 விதம் திறமை அடிப்படையிலும் ஜனத்தொகை விகிதாசார அடிப்படையில் 55 விதமும், 15 விதம் பின்தங்கிய மாவட்டங்களிலிருந்தும் தெரிவசெய்யப்படுவர்

இத்தகவலை பதில் கல்வி அமைச்சர் திரு. லயனல் ஜயதிலக பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

பல்கலைக்கழகப் பிரவேசம் குறித்து ஆராய்ந்த அமைச்சரவை உபகுழுவின் ஆலோசனையின்படியே அடுத்த ஆண்டில் பல்கலைக்கழக அனுமதி வழங்கப்படுகிறது என்றும் அவர் கூறினார்

திறமை அடிப்படையில் 30 வீதமான மாணவர்கள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் ஜனத்தொகை விகிதாசார அடிப்படையில் 24 மாவட்டங்களிலும் இருந்து 55 விதம் பேர் தெரிவுசெய்யப்படுவர். மிகுதி 15 விதமானோரும் பின்தங்கிய 12 மாவட்டங்களிலுமிருந்து தெரிவுசெய்யப்படுவர் என்றும் திரு ஜயதிலக கூறினார்

பல்கலைக்கழகத்தில் அனுமதி பெற்ற மாணவர்கள் பற்றிய விபரம் அடுத்தாண்டு ஜனவரியில் வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார். [இ]

## யாழ்-மட்டுநகர் பஸ்சேவை வழமைபோல்

(யாழ்ப்பாணம்)

யாழ்-மட்டக்களப்பு பஸ் சேவைகள் மீண்டும் வழமை போல் இயங்குகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு காலையிலும் மாலையிலும் பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன

அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி, கம்பளை, அனுராதபுரம் ஆகிய இடங்களுக்கு வழமைபோல் பஸ் சேவை நடைபெற்றுவருகிறது

### ரயில் சேவை

காங்கேசன்துறைக்கும் கொழும்புக்குமிடையே காலை யாழ்தேவி கடுகதி ரயிலும் மாலை தபால் ரயிலும்மட்டுமே சேவையிலீடுபட்டு வருகின்றன. (இ)

### தேவை

யாழ்ப்பாணத்திற்கும் கோண்டாவில் இ.போ.ச. டிப்போவுக்கும் இடையில் பலாலி வீதியில் பயிர்ச்செய்கைக்கு இரண்டு ஏக்கர் காணி தேவை. கற்பூமியாளுலும் தொடர்புகொள்ளவும்.

யாழ். நகருக்கும். யாழ் வளாகச் சந்திக்குமிடையில் பலாலி வீதியில் வீடொன்று விலைக்குத் தேவை. கடித மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல; 0949, C/o 'ஈழநாடு' லிமிட், யாழ்ப்பாணம்.

0949

## யாழ்ப்பாணத்தில் பிராந்தியவானொலிநிலையம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் 1980ம் ஆண்டு பிராந்திய வானொலி நிலையம் ஒன்று அமைக்கப்பட உள்ளது. இதற்கான காணியும் அரசினால் சுவீகரிக்கப்பட்டுள்ளது

இத்தகவலை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. காரியகரவண நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

இன்னும் இரண்டு ஆண்டுக்குள் கண்டி, அனுராதபுரம், மாத்தறை ஆகிய இடங்களிலும் பிராந்திய ஒலிபரப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும் அனுராதபுரத்தில் அடுத்தாண்டு பெப்ரவரி ம் திகதி புதிய பிராந்திய வானொலி நிலையம் ஆரம்பித்து வைக்கப்படும் என்றும் அவர் கூறினார். (இ)

## அமெரிக்ககுழு மட்டுநகர் விஜயம்

### புனர்நிர்மாணத்துக்கு ஆலோசனை வழங்கும்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் சூருவளி, வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களை ஒரு விசேட அமெரிக்க குழு ஒன்று நேற்று சென்று பார்வையிட்டது.

நிவாரணப்பணிகளுக்கும் புனர்நிர்மாண வேலைகளுக்கும் ஆலோசனைகளை வழங்க இங்கு வந்த இக்குழு பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டதுடன் இலங்கை அதிகாரிகளுடனும் இடப்பணிகள் பற்றி ஆராய்ந்தது

இதேவேளையில் நேற்று அமெரிக்காவிலிருந்து இன்னுமொரு குழு கொழும்புக்கு வந்து சேர்ந்தது

### நிவாரண நிதி குவிகிறது

இதேசமயம் வெளிநாடுகளிலிருந்து நிவாரண நிதியும் பொருட்களும் தொடர்ந்து

(6 ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

விலங்கு உயிரியல் ஆக்கியோன் 'கிரேுப் அன் றுவல்' 15, கொழும்புத்துறை வீதி, கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 0925

### விற்பனைக்கு

ச வை மொறிஸ் மைனர் இரண்டாவது உரிமையாளர் மிகச் சிறந்த நிலை. விலை ரூபா 21,000/-. தொடர்பு கொள்ளவும். 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 0925

30 ஏக்கர் தென்னந்தோட்டம் விற்பனைக்கு உண்டு. எழுதுமட்டுவாழ் கிளாலி றோட்டில், விபரங்களுக்கு 36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0936

சாவகச்சேரி தபாலகந்தா வீதியில் ஸ்கந்தா அக்கெடமிக்குப் பின்னல் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: சி. அப்புத்துரை இளைப்பாறிய ஆசிரியர். உரும்பராய். 0937

வவனியா நகர எல்லைக்குள் மன்னார் வீதியில் தண்ணீர், மின்சார வசதியுடன் மில் போடுவதற்கும், வீடு கட்டுவதற்கும் ஏற்ற இரண்டு ஏக்கர் நிலம் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: 69/1, பஸார் வீதி. வவனியா டெலிபோன்: 348 0945

வவனியா-மன்னார் வீதியில் 10 1/2 கட்டையில் செய்கையில் இருக்கும் 5 ஏக்கர் மேட்டுக் காணி பெரிய கிணற்றுடன் சகல வசதிகளுடனும் விற்பனைக்குண்டு கோட்டம், நெற்செய்கை தொழிற்சாலை வீடு கட்ட சகலதிற்கும் உகந்தது. தொடர்புகொள்ளவும்: கு. திருச்சிற்றம்பலம். "ருஜ் மகால்" சாவகச்சேரி. 0951

### தேவை

யாழ்ப்பாணம் - காங்கேசன் துறை வீதியில் நடைபெற்று வரும வியாபார ஸ்தலத்தின் புத்தகசாலைப் பகுதிக்கு முதலீடு செய்து சேர்ந்து நடாத்தக்கூடிய ஓர் பங்காளர் தேவை. விபரங்களுக்கு: வே. கந்தசாமி, 236, K.K S வீதி, யாழ்ப்பாணம். 0938

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பாடசாலைக்கு அருகாமையில் 235, அரசடி வீதியில் இருக்கும் வீட்டின்முன் கல்அட்டியல் ஒன்று கைதவறிவிழுந்துவிட்டது. எடுத்தவர் மேற்காட்டிய விலாசத்தில் ஒப்படைத்தால் நியாயமான சன்மானம் வழங்கப்படும். கு வை. முத்தையா (கணக்காளர்). 09*4

### பயிற்சி

3 மாத டிப்பிளோமா மோட்டார் மெக்கானிக் பயிற்சி 05-01-1979 ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு, அதிபர். இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 11/B, மொசாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 091

### அறிவித்தல்

தெல்லிப்பழை ப நோ. கூ. சங்கத்தில் 10, 000 வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரமூலம் விற்பனைக்குண்டு ரூபா 250/- தலைமைக் காரியாலயத்தில் செலுத்தி கேள்விப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளவும். கேள்விப் பத்திரம் 78-12-08 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 2-30 மணிக்கு முன்னர் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும். தபால் உறையின் இடது பக்கத்தில் "சாக்குக் கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடல் வேண்டும். கேள்விப் பத்திரம் 78-12-08 ஆம் திகதி வெள்ளிக்கிழமைமாலை4-00 மணிக்கு சங்க உபசபையினரின் முன்னிலையில் திறக்கப்படும்

பொதுமுகாமையாளர்

78-11-30 0916

---

பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலை

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

### வெற்றிடங்கள்

1. யந்திரமூலம் கண்ணாடிப் பொருள்கள் உற்பத்தியில் அனுபவமுள்ளோர
2. ஊதுபவர்கள் Blowers)
3. உதவியாளர் (Gatherers)
4. குமிழர் (Bubblers)
5. மழுப்புபவர் (Fusers)
6. சூளைப்பகுதி உதவியாளர்
7. வேலை பழகுவோர் (நாள் சம்பளம் ரூபா 5/-)

8-12-78 காலை 10-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை விண்ணப்பப்பத்திரத்துடனும், நற்சாட்சிப் பத்திரத்துடனும நேரில் வரவும். 0922

---

## மரண அறிவித்தல்

### றெஜீனு - ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறை, சுருவில் வீதியைச் சேர்ந்த திருமதி றெஜீனு காலமானார் இவர் திருமதி றேஸ் மலர் பிலிப்பையா, திருமதி கே. எவ். சேவியர் சட்டத்தரணி (பிரபல கம்பனிகளின் உரிமையாளரும், மெற்றலின் ஹாட்வெயர் ஸ்ரோரின் பங்காளரும்) ஆகியோரின் தாயாரும், திருமதி மெற்றலின் சேவியரின் மாமியாரும், பி. ஜே மரியதாஸ் சவோய், திருமதி ராஜேஸ் (கிளி) மரியதாஸ், தேவபாலன் (இங்கிலாந்து) திரு. மகேந்திரன் சேவியர் சின்டேக்ஸ், திருமதி ராஜேஸ்வரி சேவியர், திருமதி சிவா சகுந்தா (ஆசிரியை, விவேகானந்தா மகாவித்தியாலயம்) திருமதி தவராசா சந்திராவினதும், திரு பாலேந்திரன் சேவியர் [உரிமையாளர் பாலேந்திரா ஓவசிஸ் கொம்பனி - மெற்றிவின் காட்போட் ஸ்ரோர்ஸ், கொழும்பு இவர்களின் பெரிய தாயாரும், எஸ் ஏ. ஞானரெத்தின பி. ஏ. பிரின்சிபல் சென் மேரிஸ் மகாவித்தியாலயம், திருமதி சரோஜா, ஞானரெத்தினம், குணம் கொடேல் பாங், கொழும்பு அமலன், விமலன், யோகன், யேசி இவர்களின் பெரிய தாயாருமாவார் பூதவுடல் இன்று சனிக்கிழமை காலையில் 8 மணிக்கு றெஜீனு பவனத்தில் இருந்து அர்ச் சூசையப்பர் தேவாலயத்தில் துக்கப் பாடற்பூசையுடன் ஊர்காவற்றுறை சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். 0953

---

## சுவீப் முடிவுகள்

[கொழும்பு]

நேற்று முன் தினம்கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 692வது சுவீப் முடிவுகள் வருமாறு;

முதலாம் பரிசு

**33 J 0282**

ரூபா 1,00.000

இரண்டாம் பரிசு

**18 R 0398**

ரூபா 40,000

மூன்றாம் பரிசு

**34 M 0786**

ரூபா 10,000

100 ஆறுதல் பரிசுகள் தலா ரூபா 1668-75 சதம் பெறும் டிக்கெட்டுகள் வருமாறு:

| | |
|---|---|
| 07 A 0731 | 09 A 0677 |
| 16 A 0977 | 22 A 0633 |
| 26 A 0523 | 33 A 0419 |
| 13 B 0733 | 22 B 0092 |
| 11 C 0032 | 02 C 0685 |
| 15 C 0386 | 24 C 0851 |
| 13 D 08-4 | 15 D 0595 |
| 31 D 0453 | 08 E 0789 |
| 10 E 0561 | 02 F 0701 |
| 13 F 0868 | 14 F 0458 |
| 14 F 0874 | 32 F 0442 |
| 10 G 0892 | 12 G .022 |
| 15 G 0641 | 16 G 0026 |
| 29 G 0751 | 30 G 0655 |
| 02 H 0565 | 03 H 0090 |
| 12 H 0817 | 16 H 0024 |
| 33 H 0516 | 03 J 0445 |
| 11 J 0667 | 30 J 0569 |
| 32 J 0778 | 27 K 0853 |
| 03 L 0511 | 14 L 0526 |
| 20 L 0204 | 05 M 0304 |
| 13 M 0143 | 17 M 0377 |
| 26 M 0421 | 04 N 0828 |
| 12 N 0436 | 21 N 0646 |
| 24 N 0501 | 29 N 0217 |
| 32 N 0403 | 01 O 0626 |
| 03 O 0446 | 15 O 0650 |
| 19 O 0232 | 39 O 0837 |
| 25 O 0869 | 27 O 0767 |
| 30 O 0507 | 01 P 0815 |
| 03 P 0806 | 05 P 0206 |
| 05 P 0250 | 17 P 0552 |
| 27 P 0237 | 32 P 0899 |
| 08 Q 0489 | 20 Q 0118 |
| 21 Q 0600 | 24 Q 0724 |
| 30 Q 0498 | 06 R 0324 |
| 01 S 0719 | 07 S 0861 |
| 08 S 0852 | 20 S 0866 |
| 09 T 0412 | 12 T 0408 |
| 15 T 0907 | 19 T 0940 |
| 22 T 0830 | 23 T 0167 |
| 10 U 0528 | 13 U 0007 |
| 31 U 0560 | 02 V 0706 |
| 07 V 0570 | 10 V 0570 |
| 10 V 0674 | 30 V 0933 |
| 02 W 0640 | 28 W 0266 |
| 04 X 0998 | 08 X 0960 |
| 13 X 0109 | 27 X 0572 |
| 10 Y 0387 | 08 Z 0565 |
| 18 Z 0695 | 20 Z 0501 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

---

மாநகரசபை, யாழ்ப்பாணம்

### 1979-ம் ஆண்டிற்கான வழங்குனர்களைப் பதிவு செய்தல்

மராமத்து வேலைகளுக்கு தேவையான பொருட்களை (கிறசர் சல்லிகள், மணல், கண்ணும்பு, தேங்காய் மட்டை, கிடுகு, கிறசர் தூள்) வழங்குவதற்கு தகுதியுடையவர்களைப் பதிவு செய்வதற்காக இக்காரியாலயத்தினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பம் அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "1979 ம் ஆண்டுக்கான மராமத்து வேலைகளுக்குரியபொருள் விநியோகப் பதிவு" எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவு திகதி 16-12-78.

க. சிவஞானம்,
யாழ். மாநகரசபை
ஆணையாளர்,

வேலைப்பகுதி,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
27-11-78. 0940

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

1. மாரிமுத்து பொன்னையாவும் பெண்
2. சின்னம்மாவும் மூளாய்.

வழக்காளி

இல. MB/512

எதிராக

1. வயிந்திலிங்கம் சின்னத்துரை இராசையாவும்
2. பெண் யோகாவதியும், வடலியடைப்பு, சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு.

எதிராளிகள்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் MB/512-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னல் விபரிககப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 18-ந் திகதி (18-12-1978) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

#### தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 3380/-ம் 31-1-1975 தொடக்கம் 30-4-1976 வரைக்கும் ரூபா 2000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுததொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும கோடடுச்செலவு ரூபா 525/90

#### ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குட்பகுதி சங்கானைக் கோவிற்பற்று சங்கானை மேற்கு இறை "குமந்தவத்தை" பர நில 4 நாலும் டங்கைளும் எல்லை கிழக்கு கந்தையா தருமலிங்கத்துக்குரிய காணி, வடக்கு முத்து செல்லத்துரைக்குரிய காணியும் வடக்கேயிருக்கும ஒழுங்கையிலிருந்து இக்காணிக்கு வரும் பாதை உரித்தும் மேற்கு முத்து செலலததுரைக்குரிய காணி, தெற்கு கதிர்வேலு கந்தையாவுக்குரிய காணி இதடங்கலும். மேற்கெல்லைக் காணிக்குள்ளிருக்கும கிணற்றில பங்கும். வழிவாய்க்கால பாவிப்புரித்தும்"

கு. சிவஸ்கந்தா,
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாகேந்திரமடம்,
வட்டுக்கோட்டை,
07-11-1978. 0952

---

## நீதிமன்ற விற்பனை விளம்பரம்

வழ. இல. ஈடு 355

1. மனோசரன் தியாகராசா
   இல. 65/2 வாட்பிளேஸ் கொழும்பு-7

வழக்காளி

எதிராக

1. சினல் ஆறுமுகம் செட்டியார்
   கைம்பெண் கமலாம்பாள் அம்மா
2. கந்தையா பரமசாமிச் செட்டியார்
   கைம்பெண் பரமேஸ்வரி அம்மா
3. செல்வநாதன்
4. பெண் றங்கநாயகி எல்லோரும்
   இல. 312 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

எதிராளிகள்.

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் ஈடு 355 இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த நீதிமன்றக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் காணி 2ம் வீடும் 1978ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி புதன்கிழமை காலை 10 மணி தொடக்கம் காணி 1ம் 11 மணி தொடக்கம் காணி 2ம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

முதலும் வட்டியும் 34050-00 வும் மேலும் 30,000,00 வருடமொன்றுக்கு நூற்றுக்கு 18 வீத வட்டியும் வழக்கு அணைத்த திகதியாகிய 1976ம ஆண்டு மார்சழ் மாதம் 01ம் திகதியிலிருந்து முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை வழக்குச்செலவு ரூபா 841-27 (இதில் நடைபெற்ற செலவு 523- 4 நடைபெறவேண்டிய செலவு ரூபா 169 49 மேலதிக சமயாசமயச் செலவு ரூபா 148-64 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

#### ஆதன் டாப்பு விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கிறை முத்தையன் வயல் நெ. பர. 1 1/2 ஒற்றைநக் கிணறும் வீடும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கு வே. சின்னத்தம்பி முகமெடமீரா லெவ்வைக்கும் செல்லையா சதாசிவம்பிள்ளைக்குரிய வாதலம் வடக்கு வைரமுத்து கைம்பெண் சிவரத்தினத்தின் ஆதனம் மேற்கு ஒழுங்கை தெற்கு விசுவலிங்கம் கைம்பெண் பாலாம்பிகையின் ஆதனத்திற்கு சோலைவரி இல. 187/31 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

2. இறை வண்ணார்பண்ணை தென்மேற்கு முத்தையன் வயல் நெ பர 3 மூன்று குளி 2 1/2 இரண்டரையும் ஆறுவை நில அளவையாளர் கே. கே. அப்புறேஸ் அவர்களால் 1958ம் ஆண்டு மாசி மாதம் 10ம் திகதி காட்டப்பட்ட 1ம் இலக்கப் படததின்படி நில. பர 2 குளி 5 . 8 கல்வீடும் கிணறும் குசினியும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை கிழக்கும் வடக்கும் சீ. எஸ் கந்தையா செட்டியாரின் உரிமைக்காதனமும் தெற்குஆஸ்பத்திரிவீதி, மேற்கு ஒழுங்கை சோலைவரி இல 185/36 ஆஸ்பத்திரி. யாழ்ப்பாணம்.

(மேலே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதி கொட்டடியில் V. M. சண்முகன் ஸ்தாபனத்திற்கு மேற்குப் பக்கத்தில் உள்ளது.)

சோ. சிற்றம்பலம்
நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்
விலைமதிப்பாளரும்.

59, நெடுங்குளம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
2-11-1978 0948

---

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஈழநாடு
The Eelanaadu

## உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள்

அடுத்தாண்டு ஆரம்பத்தில் நடைபெறவிருந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை அரசு ஒத்திவைத்திருக்கின்றது.

இத்தேர்தலில் போட்டியிட்டு எப்படியும் ஓர் இடத்தைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென திட்டங்கள் தீட்டிக்கொண்டிருந்த தனிப்பட்டவர்களுக்கும், தேர்தலில் முழுமூச்சாக இறங்க ஏற்பாடு செய்து கொண்டிருந்த அரசியல் கட்சிகளுக்கும் இந்த அறிவிப்பு ஏமாற்றம் தரவே செய்யும்.

பல ஆண்டுகளின் பின்னர் இந்தத் தேர்தல் நடைபெற இருக்கின்றது.

உண்மையான ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால் உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் கைகளில் இருப்பது அவசியம்.

ஆனால் இத் தேர்தல்கள் ஒத்திப்போடப்பட்டிருக்கும் சூழ்நிலையைப் பார்க்கும் போது அரசு எடுத்த நடவடிக்கையைப் பாராட்டாமலிருக்க முடியாது.

நாட்டின் ஒருபகுதி பயங்கர சூறாவளிக்குள்ளாகி பெருந்தொகையான உயிர்ப் பலிகள் ஏற்பட்டிருப்பதுடன் லட்சக்கணக்கான மக்கள் உடைமைகளை யெல்லாம் இழந்து நிர்க்கதிக்குள்ளாகி இருக்கிறார்கள்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நகரங்கள் பலவும் முற்றாக அழிந்துபோய்க் கிடக்கின்றன.

இந்த அழிவுகளைச் செப்பனிடவும், பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைக்கவும் அரசாங்க இயந்திரத்தின் சகல பிரிவுகளும் ஒருமுகமாக திருப்பிவிடப்பட்டுள்ளன.

பொதுசன இயக்கங்களும், அரசியல் மத ஸ்தாபனங்களும் இயன்ற அளவில் நிவாரண பணிகளைப் புரிவதில் தம்மை ஈடுபடுத்த வேண்டிய நிலையிலிருக்கின்றன.

இந்த நிலைமையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படுவது அவசியம் தான் என்று யாரும் கூறினால் அது கேலிக்கிடமாகவே இருக்கும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை ஒத்திப்போடுவதென்ற தீர்மானம் பாராளுமன்றத்தின் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றில் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இத் தேர்தலை விட பாதிக்கப்பட்ட மக்கள் நலனைப் பேணுவதே முக்கிய கடமை என்பதை கட்சித் தலைவர்கள் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

மேலும் இம்முறை உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் புதிய அரசியல் திட்டத்தின் கீழ் விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையில் நடைபெறவிருப்பதால் இதில் அவசரம் காட்டாமல் கவனமாக செய்ய வேண்டியிருப்பதை பிரதம மந்திரி திரு ஆர். பிரேமதாசா சுட்டிக்காட்டியிருக்கிறார்.

எவ்வகையில் பார்த்தாலும் இப்போதைய நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களை ஒத்திவைத்து நிலைமை சீரான பின்னர் நடத்துவதென்ற முடிவு வரவேற்கத்தக்கதே.

# ஜிம்மிகார்ட்டரைவிட அதிக அதிகாரம் படைத்தவர் இலங்கை ஜனாதிபதி!

## ஜனநாயக சோஷலிஸ குடியரசின் பட்ஜட்டில் சோஷலிஸத்தை காணவில்லை

### -- மானிப்பாய் எம். பி.

(கொழும்பு)

"பணக்காரர்களை மேலும் பணக்காரர்களாகவும் ஏழைகளைத் தொடர்ந்தும் ஏழைகளாகவும் ஒதுக்கும் ஒரு முதலாளித்துவ வரவு-செலவுத் திட்டமே இது. முன்னைய ஐக்கியதேசியக்கட்சிக்கும் தற்போதைய ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எந்த விதமான வித்தியாசத்தையும் இந்த வரவு-செலவுத் திட்டம் எடுத்துக் காட்டவில்லை."

பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்டம் மீதான 5 நாள் விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மானிப்பாய் உறுப்பினர் திரு வி. தர்மலிங்கம் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

### நல்லதொரு எதிர்க்கட்சி

"பால்மாவின் விலையை அரசாங்கம் பன்மடங்குகளால் உயர்த்தியபோது எதிர்க்கட்சியினர் தெரிவித்த எதிர்ப்பால் பின்னர் அந்த விலை உயர்வு வாபஸ் பெறப்பட்டது. நல்லதொரு ஆட்சிக்கு நல்லதொரு எதிர்க்கட்சி அவசியம் என்பதை இது நன்றாக உணர்த்துகிறது.

ஆனால் இந்த நிலையில் இச் சபையில் தங்காலை உறுப்பினர் பேசிய பேச்சு குறித்து நான் கவலை அடைகிறேன். எமக்கு அளிக்கப்படும் ஜீப்புகளைப் பற்றியும் டயர்களைப் பற்றியும் அவர் பேசினார். இவற்றையெல்லாம் பெற்றுத்துக்கொண்டு நாம் அரசாங்கத்தை எதிர்க்கிறோம் என்று அவர் கூறியது அவரின் அரசியல் அனுபவமின்மையைத் தான் காட்டுகிறது.

"பாராளுமன்ற ஜனநாயக முறை தெரிந்திருந்தால், அவர் அப்படிப் பேசியிருக்கமாட்டார். பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் அவருக்குள்ள உரிமைகள் எமக்கும் உண்டு. எமக்கு இவை இலவசமாக அளிக்கப்படவில்லை. கடந்த அரசின் காலத்தில் எதிர்க்கட்சியிலிருந்த உங்கள் கட்சியினருக்கும் (ஐ. தே. க.) இவை அளிக்கப்பட்டன.

### சலுகைகள் விஷயம்

"நடுத்தரப் பகுதியினருக்கு சில சலுகைகளை இந்த வரவு-செலவுத் திட்டம் அளித்தாலும் எவ்வளவு காலத்துக்கு அவை அளிக்கப்படும் என்பது பற்றிக் கூறுவதற்கில்லை. உள்ளூராட்சித் தேர்தல்களை அடுத்த விலைகள் உயர்த்தப்படலாமென்றே கருதப்படுகிறது.

"ஆட்சிக்கு வந்ததும் வாழ்க்கைச்செலவைக் குறைப்போம்" என்று நீங்கள் அளித்த வாக்குகள் உங்களை ஆட்சிபீடத்தில் ஏற்றியது. வாழ்க்கைச்செலவு இமாலய உச்சிக்குச் சென்றுவிட்டதாக என்று கூறிய நீங்கள், இன்று ரஷ்ய ராக்கட் வேகத்தில் உயரச்செய்துகொண்டிருக்கிறீர்கள். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் மிளகாய், வெங்காயத்தைத் தவிர வேறு எந்தப் பொருள்களினதும் விலையும் குறையவில்லை. ஊழல்களும் நிர்வாகத்திறமையும் இன்னமும் நிலவுகின்றன என்று ஜனாதிபதியே கூறுகிறார்."

உறுப்பினர் ஒருவர்: ஒரு வருடத்தில் இவற்றையெல்லாம் நீக்கிவிட முடியுமா?

திரு. தர்மர்: ஓர் இரவில் செய்துவிடமுடியும்.

உறுப்பினர்கள்: எப்படி?

திரு. தர்மர்: நாம் ஆட்சியை அமைத்தால் செய்வோம்.

திரு. தர்மலிங்கம் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

"அமெரிக்க அதிபர் ஜிம்மி கார்ட்டரைவிட அதிக அதிகாரம் படைத்த இலங்கை ஜனாதிபதி ஆட்சிக்குப் பொறுப்பாக இருக்கிறார். அவரே மந்திரி சபைக்கும் தலைவராகவும் விளங்குகிறார். ஜனநாயக சோஷலிசக் குடியரசு என்று அழைக்கப்படுகிறது. ஆனால் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் எங்கே இருக்கிறது. சோஷலிசம்? தனியார்துறையினர் நாட்டை அபிவிருத்தி செய்வார்கள் என்று கூறி அவர்களுக்குச் சலுகைகள் அளிக்கப்படுகின்றன. ஆனால் இவர்கள் நாட்டின் அபிவிருத்திக்கு உதவுவார்கள் என்று கூறிவிடமுடியாது. திட்டமிட்ட பொருளாதார நடவடிக்கைகள் மூலமே அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

### "அமிர்" நிகழ்த்திய பேச்சு

"இன்னொரு விடயத்தைப் பற்றி நான் இங்கு குறிப்பிட வேண்டும். இங்குள்ள பின்வரிசை உறுப்பினர் பலர் எமது தலைவர் அமெரிக்காவில் நிகழ்த்திய பேச்சுப் பற்றி பிரஸ்தாபித்தனர். இந்த அரசாங்கத்தின்கீழ் தமிழ் மக்கள் பாதுகாப்பிழந்து இருக்கின்றனர் என்று அவர் அங்கு கூறியது பிழையென்று கூறுகின்றனர்.

### சிறிமா ஆட்சியில்...

"திருமதி பண்டாரநாயக்கா இந்த நாட்டை ஏழு ஆண்டுகள் ஆண்டார். அவரின் ஆட்சிக்காலத்தில் ஒருபோதுமே இந் நாட்டில் இனக்கலவரம் ஏற்படவில்லை. அவரது ஆட்சிக் காலத்திலும் தனிநாடுகோரிக்கையை முன்வைத்து மிகக் காரசாரமாக விவாதித்திருக்கிறோம், பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம். அவ்வேளைகளிலெல்லாம் இனக்கலவரம் எழவில்லை. எனவே தான் முந்திய அரசைவிட இந்த அரசின்கீழ் பாதுகாப்பையிழந்திருக்கிறார்கள் என்று கூறுகிறோம். இந்த நாட்டின் அரசியல் வரலாறு இங்குள்ள பின்வரிசை உறுப்பினர்களுக்கு தெரியாது.

ஓர் அரசாங்க பின்வரிசை உறுப்பினர்:

1977 ஆகஸ்ட் கலவரம் இனக்கலவரம் அல்ல; அது ஓர் அரசியல் கலவரம்.

திரு சந்திரசிறி (வடிமண் காவ: ஐ.க.)

யார் அதைச் செய்தார்கள்?

அரசு உறுப்பினர்: நீங்கள் தான்! [ம]

## மணிவாக்கு

ஆண்டவனை அடைவதே தான் உனது இலஷியம். இதையான்றும் ஞாபகத்தில் வைத்துக்கொள்.

—ஸ்ரீ சுவாமி சிவானந்தா

## கிளிநொச்சி ஊர்காவற்றுறை புதிய பஸ்சேவை

(பலாலி)

கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவினர் பிரயாணிகளின் நன்மை கருதி கிளிநொச்சியிலிருந்து ஊர்காவற்றுறைக்கு புதிய பஸ் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

அண்மையில் இந்த டிப்போவினர் குறிகட்டுவான்வரை ஒரு புதிய பஸ்சேவையை ஆரம்பித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. [அ]

## கீழ்மட்ட ஊழியர் நிலை பற்றி அரசு சிந்திக்க வேண்டும்

### -- திருமலை எம். பி.

(கொழும்பு)

'கீழ்மட்ட அரசாங்க ஊழியருக்கு நீங்கள் அளிக்கும் சம்பள உயர்வு சிலதினங்களுக்கு முன்னர் பல்வேறு விதத்திலும் உயர்த்தப்பட்ட கட்டணங்களினால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவின் உயர்வைக் கூடச் சமாளிக்கப் போதாது. அவர்களின் உயிரைக் கையில் பிடித்துக் கொள்ளும் வகையில் மிக அற்பசொற்பமேதான் அது உதவுவதாக அமையும்.'

பாராளுமன்றத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் வரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் பேசிய திருக்கோணமலை உறுப்பினர் திரு. இரா சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

'கடந்த 4, 5 மாதங்களுள் மோட்டார் வாகன வரிக்கட்டணம், பஸ், மின்சாரம், தொலைபேசி, தபால் கட்டணம், மா, பால்சவையின் பால் ஆகியவற்றின் விலைகள் உயர்த்தப்பட்டன. இன்று ஆகக் குறைந்தது 50 ரூபாவாக அளிக்கப்படும் 10 சதவீத சம்பள உயர்வு கீழ்மட்ட உத்தியோகத்தருக்கு எவ்வித நிவாரணத்தையுமே அளிக்கப்போவதில்லை. ஆனால் அதேவேளை ஆயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட சம்பளம் பெறுபவர்கள் அதிக சலுகைகளைப் பெறுகிறார்கள். இவர்களுக்கு இந்த 10 சதவீத சம்பள உயர்வுடன் வருமான வரியிலிருந்தும் விலக்களிக்கப்படுவதால் அதிக நிவாரணத்தை அவர்கள் பெறுகிறார்கள்.

உயர் பதவிகளில் உள்ளவர்களுக்கு சலுகைகளை அளிக்க வேண்டாம் என்று நாம் கூறவில்லை. அவர்களின் சேவை இந்த நாட்டுக்குத் தேவை. நியாயமான சம்பளம் அவர்களுக்கு வழங்கப்படவே வேண்டும். வெளிநாடுகளுக்கு மூளைசாலிகள் வெளியேறுவதைத் தடுக்க வேண்டியது அவசியம். இப்பொழுது அரசு இவர்களுக்கு அளித்துள்ள சலுகைகள் இவர்களுக்கு வரப்பிரசாதமாகவே இருக்கமுடியும். தங்கள் உயர்வான பணியை நாட்டின் அபிவிருத்திக்கு அவர்கள் அளிப்பார்கள் என்றே நம்புவோம். ஆனால் அதேவேளை கீழ்மட்ட ஊழியர் நிலையையும் யதார்த்த நிலையில் அரசு ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். கீழ்மட்ட உத்தியோகத்தர்கள் நாட்டில் ஒரு பெரும் பகுதியினர். அவர்களின் அதிருப்திக்கு அரசாங்கம் இடமளிக்கலாமா? நாம் எதிர்க்கட்சியிலிருந்து எதையும் கூறவில்லை. அனுதாபத்தான் எனினும் கீழ்மட்ட உத்தியோகத்தர் படுநிலைக் குறைக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு என்றே கருதுகிறேன்" என்று திருமலை எம். பி. கூறினார். (ம)

## பெ.ஆ.சங்கக் கோரிக்கை

[நாயன்மார்கட்டு]

நாயன்மார்கட்டு பதேஸ்வரி வித்தியாசாலை பெற்றோர் ஆசிரிய சங்கக் கூட்டத்தில் பாடசாலை வளர்ச்சியின் பொருட்டு பட்டதாரி ஆசிரியர்களை நியமித்துத் தரும்படி தீர்மானம் நிறைவேற்றி வட மாநில கல்வி அதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளனர். (க)

## வயாவிளான் தேவமாதா திருவிழா

[பலாலி]

வயாவிளான் ஒட்டகப்புலம் தேவமாதா கோவில் வருடாந்த திருவிழா அதி வண. பிதா லெபோன் தலைமையில் சென்ற மாதம் 29-ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகியது.

திருவிழா நாட்கள் வழமைபோல் உரிய ஆராதனைகளுடன் நடைபெறுகின்றன. கடைசிநாள் ஆகிய இம்மாதம் 8-ம் தேதி கூட்டுப் பாடல் பூசையுடனும் சப்பரத்துடனும் பிதாக்களின் நற்கருணை ஆசிர்வாதத்துடனும் முடிவடையும்.

## சீமெந்து தட்டுப்பாடு

[நெல்லியடி]

வடமராட்சிப் பகுதியில் சீமெந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து வருவதால் இந்தத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. இப் பெருந் தட்டுப்பாட்டினால் தனிப்பட்ட வர்த்தகர்கள் கூடிய விலைக்கு விற்பனை செய்து கொள்ளை லாபம் அடிக்கின்றார்கள்.



# ஜப்பானில் முதல்வர் எம். ஜி. ஆருக்கு

# குதூகல வரவேற்பு!

டோக்கியோ, டிச. 1.

**அமெரிக்க சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு ஜப்பா ன் தலைநகர் டோக்கியோ வந்துசேர்ந்த தமிழ்ந ுடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு விமானநிலையத்தில் குதூகல வரவேற் பளிக்கப்பட்டது.**

**விமான நிலையத்தில் ஜப்பானில் உள்ள பாரத தூதுவர் உட் ட பெருந் தொகையானோர் முதலமைச்சரை வாஞ்சையுடன் வ,வேற்றனர்.**

ஜப்பானில் உள்ள பாரத நாட்டவர் முதலமைச்சருக்கு பெரும் வரவேற்புவிழா ஒன் றினை அளித்து கௌரவித்த னர்.

டோக்கியோவில் திரு. எம், ஜி ஆர் மூன்று நாட் கள் தங்கியிருப்பார்.

ஜப்பான் அமைச்சர்களுட னும் திரு. எம். ஜி. ஆர். பேச்சுவார்த்தை நடத்து வார்.

ஜப்பானில் உள்ள பல தொழில் நிறுவனங்களையும் பார்வையிடவிருக்கும் அவர் ஜப்பானியத் தொழில் நுட் பங்களை அவதானித்து அவற் றைத் தமிழ்நாட்டிலும் பின் பற்ற முடியுமா என்பதுபற்றி கவனம் செலுத்துவார். [உ]

## இன்றைய இராசிப்பலன்

கார்த்: மாதம் 16-ந் திகதி சனிக்கிழமை (2-12-78)

மேடம்:-உல்லாச மாகப் பொழுதைப் போக்குவீர்கள். சுறுசுறுப்புடன் செயலாற்று வீர்கள். புத்திரவழியாலும் மகிழ்ச்சிக்கிடமுண்டு.

இடபம்:- கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்க வும் போக்குவரத்து விடயத் தில் அதிககவனம் செலுத்த வும். அதிகபேச்சைக் குறைக் கவும்.

மிதுனம்:- குடும்ப வாழ் க்கைஇன்று சுகமாக இருக்கும். டாக்டர்களுக்குச் சிறப்பான தினம். களஸ்திர வழியாலும் நன்மைகள் வந்துசேரும்.

கடகம்:- நண்பர்கள் தொல் லையால் நலிவுகள் தோன்றக் கூடும். தொழில் துறையிலும் கவலைக்கிடமுண்டு. அவதா னத்துடன் கவலைக்கிடமுண்டு அவதானத்துடன் செயலாற்ற வும்.

சிங்கம்:- நிர்வாக உத்தி யோகஸ்தர்களின் வாழ்வு வளர்பிறையாகும். கனிவான நினைவுகள் மத்தியில் நடமாடு வீர்கள். பெரியோர் ஆதரவும் உண்டு.

கன்னி:- துணிச்சலுடன் காரியங்களைச் செயலாற்று வீர்கள். தொழிற்சிறப்புக்கும் இடமுண்டு. சிலர் வாழ்க்கை யில் இடமாற்றத்துக்கான ஆலோசனைகளும் உருவாகும்.

துலாம்:- எதிலும் முன் னேற்றம் சாணடபடும். பொருள் வரவிற்கும் இட முண்டு. நீண்ட நாள் கடன் நிவர்த்தியாவதற்குமிடமுண்டு

விருச்சிகம்- தானிய நஷ் டத்திற்கிடமுண்டு. குறுக்கு வழியில் இறங்கவேண்டாம் தொழிலிலும் தொல்லையுண்டு.

தனுசு:- அவசர முடிவின் மூலம் ஆபத்து விளையலாம். துதிபாடிக்கொண்டே சிலர் துரோகச் செயலில் ஈடுபடுவர். வைத்தியச் செலவிற்கும் இட முண்டு.

மகரம்:- இல்லத்தில் இனி மையான சம்பவங்களுக்கிட மூண்டு. நீண்டநாள் பூமிப் பிணக்கும் இன்று நிவர்த்தி யாகும். தானியவிருத்திக்கும் இடமுண்டு.

கும்பம்:- எதிர்பார்த்த விடயத்தில் தடைகள் உருவா கும். குடும்பத்திலும் பதட்ட நிலை தென்படும் உஷாராக இருக்கவும்.

மீனம்:-: உற்சாகம் பெரு கும். விளைபொருள் விருத்தியு டன் விருந்துக்கும் இட முண்டு மாதுரு வழியாலும் புதினத்திற்கிடமுண்டு.

சோதிடக்கலாநிதி

திருமலை க. வேலுப்பிள்ளை

## சீனாவுக்கு 10 லட்சம் டாலர் பிரெஞ்சு ஆயுதங்கள்

பாரிஸ், டிச. 1

''சீனா ஏறத்தாழ 10,000 லட்சம் டொலர்கள் பெறு மதியுள்ள ஆயுதங்களை அடுத்த சில ஆண்டுகளினுள் பிரான்ஸிடமிருந்து வாங்க வுள்ளது 'மிலான்' 'ஹொட்' ரக டாங்கி எதிர்ப்பு ஏவு கணைகளும் வாகனுதிகளும் இவற்றுள் அடங்கும் இவற் றைக் கொள்வனவு செய் வது பற்றிய பேச்சுவார்த்தை கள் தற்போது பாரிஸில் நடைபெற்று வருகின்றன என்று பிரெஞ்சு வாரப் பத் திரிகையான லீநோவெல் எழுதியுள்ளது.

தற்போது லண்டனில் உத் தியோகபூர்வ விஜயத்தினை மேற்கொண்டுள்ள சீன உப பிரதமர் வாங் சென் னும் பிரிட்டனிடமிருந்து போர்விமானங்களை வாங்கு வது பற்றி பேச்சுவார்த்தை களை நடாத்தி வருவதாக லண்டன் தினசரி டைம்ஸ் அறிவித்துள்ளது. டைம்ஸ் பத்திரிகையில் வெளியாகி யுள்ள செய்தி அறிக்கை யொன்றின் பிரகாரம் 'ஹரியர்' போர் விமானங் கள் உட்பட சீனாவுக்கு ஆயு தங்களை விற்பனை செய் வதற்கு பிரிட்டிஷ் பிரதமர் கலகன் சீன உதவிப்பிரதம ரிடம் இணக்கம் தெரிவித் துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து ஆயு தங்களைப் பெறுவதற்காக ஜப்பானிய வங்கிகளிட மிருந்து 10,000 லட்சம் டாலர் கடனைப் பெறுவது பற்றி தற்போது சீனப்பிரதி நிதிகள் பேச்சுவார்த்தைகள் நடாத்தி வருவதாக டாஜ்ஸ் அமெரிக்காவில் உப தலைவர் அறிவித்துள்ளார்.

## தேங்காயில் கொள்ளைலாபம்

(யாழ்ப்பாணம்)

சமீபத்தில் நாட்டில் உண் டான சூறுவளியைப் பயன் படுத்தி பல வர்த்தகர்கள் தேங்காயில் கொள்ளைலாபப் அடித்துவருகின்றனர்.

வலிகாமம் வடக்குப்பகுதி யில் அப்பாவி மக்களை வருத்தி தேங்காயில் கொள்ளைலாபம் அடிப்போர் தொகை அதிக ரித்திருப்பதாகக் கூறப்படு கிறது

தட்டுப்பாடு உண்டாவது சகஜம்தான் அதற்காக மனச் சாட்சியின்றி பெருமளவில் கொள்ளைலாபம் அடிப்பதா என்று மக்கள் கவலைதெரி விக்கின்றனர். [உ]

**வெள்ள நிவாரணம்:**

## தமிழக அரசு பணியில் ஜனாதிபதி நம்பிக்கை

சென்னை, டிச 1

தமிழ்நாட்டில் உண்டான வெள்ளம, சூறுவளி அனர்த் தங்கள் தொடர்பான நிவா ரணப் பணிகளில் தமிழ்நாடு அரசு சிறாகச் செயல்படும் என்பதில் தமக்குச் சந்தேக மில்லையென்று பாரத ஜனாதி பதி திரு, நீலம் சஞ்சீவ ரெட்டி தெரிவித்திருக்கிறார்,

தமிழ்நாடு ஆளுநர் திரு, பிரபுதாஸ் பட்வாரிக்கு எழுதி யுள்ள கடிதம் ஒன்றில் ஜனாதிபதி தமது இந் நம் பிக்கையைத் தெரிவித்துள் ளார். (உ)

## “நாட்டில் வறுமை நீங்கவில்லையே”

### வி. வி. கிரி கவலை

சென்னை, டிச. 1

''நாடு இன்னமும் வறு மைப்பிடியில் உழல்வதில் இருந்து விடுபடவில்லையே'' என்று முன்னாள் பாரத ஜனாதிபதி திரு வி வி. கிரி கவலை தெரிவித்தார், சென்னை யில் நடைபெற்ற விடுதலை வீரர் ஒருவரின் நூற்றாண்டு விழாவில் பேசுகையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட் டார்

இவ்விழாவில் ஆச்சாரிய கிருபளானியும் கலந்துகொண் டார். (உ)

## ஆங்கிலப்பரீட்சை பெறுபேறுகள்

(கோண்டாவில்)

கடந்த வருடம பரீட்சை த் திணைக்களத்தினால் நடத்தப் பட்ட ஆங்கில தேசிய தகு தித்தேர்வு பரீட்சைபெறு பெறுகள் வெளியாகியுள்ளன

இப்பரீட்சைக்கு கடந்த வருடம் யாழ்ப்பாணம் டெ் தொழில் நுட்பநிலையத்தில் இருந்து மொத்தம் 12 பேர் தோற்றியிருந்தார்கள் இவர் களில் 4 பேர் சித்தியடைந் துள்ளனர். இவர்களின் பெயர்கள் பின்வருமாறு எஸ். சிவதாஸ் என் சாந்த ரூபா என். சிவலட்சுமி ஆர் ரஞ்சினி என். சிவலட்சுமி இவ்வருடம் யாழ், தொழில நுட்பநிறுவனத்தில் இருாத இப்பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில திறமைசித்தி பெற்ற மாணவி ஆவார் (உ)

## கதவுடைத்து கடையில் திருட்டு

(கோண்டாவில்)

நேற்று முன்தினம் நள்ளிரவு பலாலி வீதியில் உள்ள கடை யொன்று உடைக்கப்பட்டு பொருட்கள் திருடப்பட்டுள் ளன.

இத் திருட்டு ஆவடிச் சந்தி யில் நடைபெற்றது.

கடை பூட்டியபின் உரிமை யாளர் வீடு சென்றுள்ளார். அதன்பின்வந்தவர்கள் கடைக் கதவுகளை உடைத்து அங் குள்ள பொருட்களை எவாடி யுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். (உ)

## கல்வித்தொண்டர் சேவை இயக்கம்

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் கல்வி வட்டா ரத்தில கல்வித்தொண்டர் சேவை இயக்கம் ஆரம்பிக்கப் படவுள்ளது

இது தொடர்பான கூட்டம் வட்டாரக கல்வி அதிகாரி திரு. எஸ் தனஞ்செயன் தலைமையில் சுன்னாகம் இராம நாதன் கல்லூரியில் இன்று முறபகல் நடைபெறவிருக்கி றது. (உ)

## நாளை யாழ் நகரில் மோதும்

(யாழ்ப்பாணம்)

திருமலையில் சிறந்த உதை பந்தாட்டக் கழகங்களில் ஒன் றான சென். அன்ரனிஸ் விளை யாட்டுக் கழகம் நாளை யாழ். நகரில் மோதுகின்றது.

யாழ் உதைபந்தாட்ட லீக் கின் இந்த வருடச் சாம்பிய னான நவாந்துறை சென். மேரிஸ் கழகமும், திருமலை சென். அன்ரனிஸ் கழகமும் நாளை யாழ் துரையப்பா விளையாட்டரங்கில், ஒரு சிநே கபூர்வமான உதைபந்தாட்ட மோதலில் கலந்து கொள்கின் றன.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும், விளையாட் டமைச்சின் யாழ். மாவட்ட உதைபந்தாட்டப் பயிற்சியா ளர் திரு எம். டி. தம்பி ராசா மேற்கொண்டுள்ளார்.

## அரியாலை வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ் உதைபந்தாட்ட லீக் கின் ஆதரவில் யாழ். விளை யாட்டரங்கில் நடைபெற்று வரும் 'நொக்கவுட்' போட்டி யில், அரியாலை ஐக்கிய விளை யாட்டுக் கழகம் 5—0 கோல் களால். தென்மராட்சி விளை யாட்டுக் கழகத்தை வெற்றி பெற்றது

**கால் முறிவு!**

இப்போட்டியின் இறுதிக் கட்டத்தில் அரியாலைக் கழக த்தின் முன்னணி வீரர் ஒருவ ரின் கால் எதிர்பாராத வித மாக திடீரென முறிந்து விட் டது. இவ்வீரர் உடனடியாக யாழ். பெரியாஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

**இன்றைய ஆட்டம்**

இன்றைய முதல் ஆட்டத் தில் புனிதவளன் கழகமும், பாடுமீன் கழக 'வி' பிரிவுக் கோஷ்டியும் மோதும். 2-வது ஆட்டத்தில் சென் மேரிஸ் 'ஏ' பிரிவும் யுத்கார்மல் கழ கமும் மோதும்.

# சென்னைமுதல் கன்யாகுமரிவரை 80 புயல் புகலிடங்கள்

### அமைச்சர் வீரப்பன் தகவல்

சென்னை, டிச 1

புதுக்கோட்டை மாவட்டத் தில் இரண்டரை லட்சம் ரூபா செலவில் புயல் புகலிடம் ஒன்று அமைக்கப்பட்டுள் ளது இதில்500 பேர்வரை தங் கலாம் இது தொடர்பாக நடைபெற்ற வைபவம் ஒன் றில் தமிழ்நாடு தகவல் ஒலி பரப்புத்துறை அமைச்சர் திரு. ஆர். எம், வீரப்பன் பேசுகையில் ''சென்னை முதல் கன்னியாகுமரி வரை 80 புயல் புகலிடங்கள் அமைக்கப்படும் என்று சொன்னர்.

இவற்றைக் கட்டுவதற்கு செஞ்சிலுவைச்சங்கம் அளிக் கும் உதவிக்கு அவர் நன்றி தெரிவித்தார். செங்கல்பட்டு, தஞ்சாவூர் மாவட்டங்களில் 12 புயல புகலிடங்கள் அமைக் கப்படும் என்றும் இவ் வைப வத்தில் தெரிவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரும் இவ் வைபவத்தில் கலந்துகொண் டனர். [உ]

நாகம்ஸ்
(கன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர். - லதா
நாளை நமதே

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா
ஒரு தாய்மக்கள்

## மரக்கன்றுவகை இலவசம்

[யாழ்ப்பாணம்]

அகத்தி, நல்லஇன வேம்பு, இலுப்பை ஆகிய கன்றுவகைகளை மரம்நாட்டிப் பயன்பெற விரும்புபவர்களுக்கு "மில்க் வைற்" ஸ்தாபனத்தார் இலவசமாக வழங்கவிருக்கின்றனர். (உ)

தினசரி 4 காட்சிகள்
வீரபாண்டிய கட்டபொம்மனின் தொடர்காவியம்
ராணி எஸ். எஸ். ஆர்- வீரப்பா
குமாரி.கமலா- டி. கே. பகவதி-ராஜம்
[யாழ். நகர்] நடித்த
சிவகெங்கைச் சீமை (புதியபிரதி)

வெலிங்டன் தினசரி 3 காட்சிகள்
[யாழ்ப்பாணம்] சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வந்தாளே மகராசி
அடுத்தவெளியீடு: லலிதா

லிடோ போன்: 7804 தினசரி 4 காட்சிகள்
[யாழ். நகர்] எங்கள் தங்க ராஜா!

மனோகரா தினசரி 4 காட்சிகள்
[யாழ்நகர்] முத்துராமன்-ஜெயலலிதா-ஸ்ரீகாந்த் சுகுமாரி நடித்த
கணவன் மனைவி

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்நகர்) சிவாஜி - ஜெமினி - சாவித்திரி நடித்த
பந்த பாசம் (புதிய பிரதி)

வின்ஸர் தினசரி 4 காட்சிகள் போன்: 466
[யாழ்ப்பாணம்] 6-வது வெற்றி வாரம்
ஓ சிவராம் ஓ சந்திரகலா ஓ தனரத்தினம் நடித்த
அநுராகம்

சபாஷ்! சபாஷ்!! சபாஷ்!!!
ஹவுஸ் புல்! ஹவுஸ்புல்!! ஹவுஸ்புல்!!!
ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
சிவாஜி - சரோஜாதேவி - மாலினி - சந்திரபாபு நடித்த (இரு வேடங்களில்)
சபாஷ் மீனா (புத்தம் புதிய பிரதி)

REGAL NOW SHOWING
(Jaffna) Daily at, 4-30, 7-00 & 9-30 p.m.
"Dr. Terror and the House of Horror's"
(Color — Adults Only)
விநாடிக்கு விநாடி உங்கள் இரத்தத்தை உறையவைக்கும் காட்சிகள் நிறைந்த பயங்கரப் படம்.
Next Attraction Full action Film SPECIALIST

HOUSE FULL! HOUSE FULL!! HOUSE FULL!!!
சாந்தி (யாழ்நகர்) போன்: 7642
10-00, 12-30, 2-45, 5-15, 7-30, 10-00
இரசிகர்களின் வசதியை முன்னிட்டு சனி, ஞாயிறு தினசரி 6 காட்சிகள்
LEE VAN CLEEF... LO LIEH...
BLOOD MONEY (Scope - Color)
'பிளாட்மணி' அதிசிறந்த கராட்டிச் சித்திரம்

# கிளிநொச்சி பஸ்நிலைய அவலநிலை நீங்காதா?

பல காலமாக கிளிநொச்சி பஸ் நிலையத்தின் அவலநிலையைப்பற்றி பொதுமக்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு எடுத்துக்கூறியும் எந்தவித அபிவிருத்தியும் நடைபெறுமல் மேலும் சீர்கேடடைந்து மக்கள் உபயோகிக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

பஸ் நிலையத்தில் பெரிய கிடங்குகள் இருப்பதால் மழை காலத்தில் அதில் நீர் நிரம்பி உள்ளது. பிரயாணிகள் கையில் மாற்றுடை எடுத்துச்செல்ல வேண்டும். அநேகமாக எல்லோர் உடையிலும் சேற்று நீர் வீசப்படுகிறது. பஸ் நிலையக் கொட்டகை உடைந்து மழைக்கு ஒதுங்கமுடியாத நிலை ஏற்பட்டதோடு, உடைந்த தகரங்கள் பிரயாணிகளை குத்திப் பதம்பார்க்கின்றன.

பஸ் நிலையத்தில் உள்ள மலசலகூடமும் அதன் அழுக்கு நீரும் வடிந்து ஓடாது கழிவு காலில் நின்று சகிக்கமுடியாத துர்நாற்றம் வீசுகிறது. பஸ் நிலையத்தை அடுத்துள்ள தேநீர் கடைகளும் கான் வசதி இல்லாததால் பஸ் நிலையத்திலேயே கழிவு நீரை ஊற்றுகிறார்கள்.

இந்தநிலையைச் சகிக்கமுடியாத மக்கள், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காதது குறித்து விசனம் தெரிவிக்கிறார்கள்.

பஸ்நிலையம், சந்தை, கிளிநொச்சி நகரம் அனைத்திலும் உள்ள வடிகால் வசதி, சுகாதார சேவையை வற்புறுத்தி "வரிகொடா இயக்கம்" ஒன்றை ஆரம்பிக்கப்போவதாகவும் பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

பொதுநலவிரும்பி
கண்டி வீதி,
கிளிநொச்சி.

## ஆசிரியருக்குக் கடிதங்கள்

ராஜாஜி நூற்றாண்டு:

### தமிழ்சமூகத்துக்கு ஒரு வேண்டுகோள்

ஸ்ரீசக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்களின் பிறந்த நூற்றாண்டு தினம் டிசம்பர் மாதம் 10ம் திகதி ஞாயிறன்று வருகிறது. அப்பெரியார் இந்து சமயத்திற்கும், கலாச்சாரத்திற்கும் உலக நன்மைக்கும் அரிய தொண்டாற்றினார்கள். எல்லாம் வல்ல இறைவனை வாழ்த்தி வணங்கி வந்தார்கள். அத்துடன் மற்றவர்களையும் அப்படியே கடவுளில் நம்பிக்கை வைக்கவும், வணங்கவும் மிகப்பெரிய தூண்டுகோலாக இருந்தார்கள். அவர்கள், எழுத்திலும், பேச்சிலும், நடையிலும் சமயத்தைச் சிரசின்மேல் வைத்துப் பூஜித்தார்கள். மனிதருடைய ஜீவியகாலம் முழுவதிற்கும் சமயமே அத்திபாரம் என்றார்கள்.

உலக விடயத்திலும் அவர் பெரிய ஸ்தானங்களை வகித்தும் பாரத ஆள்பதியாகவும், தமிழ்நாட்டிற்குப் பிரதம மந்திரியாக இருந்தும் விசேட தொண்டாற்றினார்கள். இலங்கைக்கும் விஜயம் செய்து எங்களுக்குப் புத்திமதிகளும், பிரசங்கங்களும் செய்து பல அரிய தொண்டுகளைப் புரிந்தார்கள். இப்பெரியாருக்கு நாங்கள் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம். டிசம்பர்மாதம் 10ம் திகதி அல்லது அதற்குப் பின் வசதியான நாளில் பல கோயில்களில் அவர்களின் ஆத்மா சாந்தியடையபிரார்த்தித்து வழிபாடு செய்வது உத்தமம். அத்துடன் ஒருவருடகாலத்திற்கு இப்பெரியாருடைய நினைவை நிலைநிறுத்த பலவித நடவடிக்கைகள் எடுப்பது நன்மையானது. நூற்றெட்டு [108] கோயில்களில மோட்ச அர்ச்சனைக்கு ஒழுங்கு செய்வது பொருத்தமானதாகும். இந்தக் கருத்துக்களைத் தாழ்மையுடன் எங்கள் சமூகத்திற்குச் சமர்ப்பிக்கவிரும்புகின்றேன்.

கோயில்களில் பரிபாலனம் செய்துவரும் பெரியோர்களும், குருக்கள்மாரும், மற்றும அடியார்களும் சிறியேன் யோசனையைத் தயவுடன்சிந்திக்குமாறு மிகத் தாழ்மையுடன் வேண்டிக்கொள்ளுகின்றேன்.

க. சிவசுப்பிரமணியம்
(இளைப்பாறிய பிரக்குராசி)
கொழும்பு.

### நூலகருக்கான பரீட்சை

[கோண்டாவில்]

கடந்தவாரம் நடைபெற இருந்த நூலகர்களுக்கான முதலாம் வருடப் பரீட்சை விணத்தாள்கள் வராமையினால் நடைபெறவில்லை

Rio (Jaffna)
2nd crowded week
Daily 4 Shows
Michael Caine in
KIDNAPPED
(Mistery—Thrill)

## போர்வை, கூடாரங்களுடன் மே. ஜெ. விமானம் வந்தது

(கொழும்பு)

மேற்கு ஜெர்மனியிலிருந்து நேற்றுக் காலை விமான மூலம் கூடாரங்கள், போர்வைகள் என்பன வந்து சேர்தன.

புயல் நிவாரணமாக மேலும் மூன்று விமானங்கள் இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு மருந்துகள் உடைகள் கொண்டுவரவிருக்கின்றன.

லண்டனிலிருந்து வாடகை விமானம் ஒன்று தடுப்பூசிகள், கூடாரங்கள் என்பன வற்றைக் கொண்டு வந்துள்ளது. (உ)

## தெல்லிப்பளை திருட்டு: ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழையில் உள்ள வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் இருந்து கடந்த ஆறு மாதங்களுக்குமுன் காணமல்போன 3500 ரூபா பெறுமதிமிக்கஇயந்திரம்ஒன்றுசங்கானை பொலிஸ்ப் பகுதியில்வைத்து மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக பொலிசார் வாலிபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைதுசெய்துள்ளனர்.

இந்த இயந்திரத்தைக் கண்டுபிடிக்கும் விடயத்தில் பொலிசாருடன் வலிகாமம் வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. கே. மகாதேவாவும் ஈடுபட்டிருந்தார்.

இந்த இயந்திரம் சங்கானைப் பகுதியில் விற்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி அலுவலகத்தில் இருந்து சிலகதிரைகள் காணமல் போனதும் பின் புகார் செய்யப்பட்டதையடுத்து அவை காணிஒன்றில் வீசப்பட்டிருக்கக் காணப்பட்டதும் குறிப்பிடத் தக்கது. பொலிசாரின் புலன் விசாரணைகள் தொடர்கின்றன. (உ)

## காந்தி ச. ச. நிலையம்

(யாழ்ப்பாணம்)

தச்சன்தோப்பு நாவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வருடாந்தக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருடநிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர் வ. சரவணமுத்து உபதலைவர் க. துரைசிங்கம் செயலாளர் பொ. இராசநாயகம் உபசெயலாளர் செ. யோகராசா தனாதிகாரி செ. செல்வநாயகம்

நிர்வாகஉறுப்பினர்கள்: செ. நடராசா, தி. செனந்தராசா, வ. ஸ்ரீதரன், இ. தங்கராசா, இ. சின்னத்தம்பி, சி. சிங்கராசா.

## பரு. வர்த்தகர் சங்கம்

(புலோலி)

பருத்தித்துறை வர்த்தகர் சங்கக் கூட்டம் பலத்த இழுபறியின்பின் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள கடை உரிமையாளர்களில் சிலர் வெள்ளிக்கிழமைகளிலும், சிலர் ஞாயிற்றுக் கிழமைகளிலும் பூட்ட விரும்புவதால் இவ்வர்த்தகர்கள் யாவரும் ஒரே நாளிலேயே கடைகளைப் பூட்டவேண்டும் என்பதனை முடிவு செய்யவே இக்கூட்டம் கூட்டப்பட்டது.

ஆனால் வர்த்தகர்கள் எல்லோரும்கூடி ஒரு முடிவுக்கு வர முடியாததால் இவ்விஷயம் பற்றிய மறு கூட்டம் எதிர்வரும் தைமாதம்வரை ஒத்திவைக்கப்பட்டது. [அ]

ஆசிரியர் தேவை
தமிழ் வாசிக்க எழுத தனிப்பட போதிப்பதற்கு தகுந்த ஆசிரியர் தேவை. விண்ணப்பதாரர் ஆங்கிலத்தில் உரையாடக்கூடியவராய் இருத்தல் வேண்டும். சம்பளம் திறமைக்கேற்ப வழங்கப்படும். சாரைநகரில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
3-12-1978 ஞாயிறுக்கிழமை காலை 9—12க்குள் நேரில் வரவும்.
P. A Anderson,
"Villa Padua",
Pandaterupu.
0941

### கள்ளக்கடத்தல் தடுப்பு:

# இலங்கை இந்திய அதிகாரிகள் சென்னையில் கூடுகின்றனர்

## டி. ஐ. ஜி. சுந்தரும் செல்வார்

(கொழும்பு)

கள்ளக்கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் பொருட்டு இலங்கை-இந்திய உயரதிகாரிகள் அடங்கிய மாநாடு ஒன்று சென்னையில் இம்மாதம் நடைபெறவிருக்கிறது.

சுங்கப்பகுதி பிரதமசேகரிப்பாளர் திரு. இலநாயகா, பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், குடிவரவு-குடியகல்வு பகுதி அதிகாரி திரு நியூட்டன் குணசேகரா ஆகியோர் இலங்கைக் குழுவில் இடம்பெறுவர்.

இரு நாடுகளுக்குமிடையில் அதிகரித்துவரும் அபின் கடத்தல் குறித்து இம்மாநாட்டில் பிரதானமாக ஆராயப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

### கூட்டுறவுப் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

சூறாவளியினால் ஏற்பட்ட விளைவுகள் காரணமாக டிசம்பர் மாதம் 4-ம் திகதி முதல் 8-ம் திகதி வரை நடாத்தப்படவிருந்த கூட்டுறவுப் பணியாளர் தராதர சாதாரண பிரிவுப் பரீட்சை காலவரையறையின்றிப் பின்போடப்பட்டுள்ளது. [க]

### 3 புதிய பஸ்கள்

(புலோலி)

கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவுக்கு மேலும் மூன்று புதிய பஸ் வண்டிகள் வந்து சேர்ந்துள்ளன.

வடபிராந்திய இ. போ. சபைத்தலைவர் திரு அமரசிங்கம், கிளிநொச்சி இ போ ச சுப்பிரிண்டன் திரு வே. ஸ்ரீஸ்கந்தராசா ஆகியோர் எடுத்த நடவடிக்கையடுத்து இந்த பஸ் வண்டிகள் வந்து சேர்ந்துள்ளன. (அ)

### 'ஈழநாடு' ஆதரவுடன் ரோட்டரி ஆரம்பித்த

# சூறாவளி, வெள்ள நிவாரண நிதி

சூறாவளி வெள்ளத்தினால் பாதிப்புக்குள்ளான மக்களுக்காக யாழ்ப்பாணம் ரோட்டரிச் சங்கம் 'ஈழநாடு' ஆதரவுடன் நிதியொன்றை ஆரம்பித்துள்ளது.

இதன் மூலம் சேகரிக்கப்படும் பணம் சூறாவளியினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ள ரோட்டறிச் சங்கங்களிடம் உடனடி உதவிகளை செய்யும்பொருட்டு கையளிக்கப்படும்.

இந்நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள்

'ரோட்டரிச் சங்கம் யாழ்ப்பாணம்'<br>
மே | பா. ஈழநாடு லிமிட்டெட்<br>
த. பெ எண். 49,<br>
யாழ்ப்பாணம்,

என்ற முகவரியிட்டு காசோலையாகவோ, காசுக்கட்டளையாகவோ அனுப்பிவைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். கொடுப்பனவுகள் யாவற்றுக்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.

இந்நிதி சேகரிப்பு 10-12-78ம் திகதியுடன் முடிவடையும்.

இதுவரை நிதிவழங்கியுள்ளவர்களின் விபரம் வருமாறு:

| | | ரூ. ச. |
|---|---|---|
| 1. | அரஸ்கோ உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி ஸ்தாபனம் | 1001-00 |
| 2. | யாழ். உலோகத் தொழிற்சாலை ஊழியர்கள் | 1001-00 |
| 3. | பெனின்சுலா கூட்டு நிறுவனம் 25, ஸ்ரான்லி வீதி, யாழ். | 1001-00 |
| 4. | எய்ரோ எலெக்ரிக்கல்ஸ் காங்கேசன்துறை | 501-00 |
| 5. | ரொட்டேரியன் எஸ் கனகரெத்தினம் | 101-00 |
| 6. | ரொட்டேரியன் ஆர். பாலசுப்பிரமணியம் | 101-00 |
| 7. | ரொட்டேரியன் ஜெகா பசுபதி | 101-00 |
| 8. | ராஜன் ஐயன் வேர்க்ஸ் யாழ்ப்பாணம் | 150-00 |
| 9. | யாழ். மெட்டல் விற்பனை நிலையம் | 251-00 |
| 10. | யாழ். மோட்டர் ஸ்டோர்ஸ் | 251-00 |
| 11. | சிங்கப்பூர் பார்மஸி லிமிட்டெட் | 251-00 |
| 12. | கே. செபமாலை புனித ஜேம்ஸ்வீதி ஊர்காவற்றுறை | 150-00 |
| 13. | ரொட்டேரியன் டாக்டர் வி விபுலேந்திரன் | 101-00 |
| 14. | பெனிசினித் ஸ்தாபனம் யாழ்ப்பாணம் | 101-00 |
| 15. | சட்டத்தரணி சி. சி. சோமசுந்தரம் ஜே. பி. யு. எம். | 101-00 |
| 16. | Dr. B. S. பாரதி. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம் | 250-00 |

### கிரிக்கெட்......

[1-ம் பக்கத் தொடர்ச்சி

மாக இன்று 95 நிமிடங்களே நடைபெற்றது.

முதலில் தடுப்பெடுத்தாடிய இந்தியக்கோஷ்டி ஒரு விக்கெட் இழப்புக்கு 67 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப துடுப்பு வீரர் சௌகான் வேகப்பந்துவீச்சால் காயமுற்று ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட்டார்.

**ஆஸி - 116**

**இங் - 2-60**

பிறிஸ்பேன், டிச. 1

பிறிஸ்பேனில் இன்று ஆரம்பமான ஆஸ்திரேலிய — இங்கிலாந்து 1-வது கிரிக்கெட் டெஸ்டில் முதலில் துடுப்பாடிய ஆஸ்திரேலியா சகல விக்கட்டுகளையும் இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது. ஒருகட்டத்தில் முதல் 6 விக்கட்டுகளையும் 26 ஓட்டங்களுக்கு இழந்திருந்தது. முதல் 6 பேரும் 7க்குக் குறைவான ஓட்டங்களையே பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 2 விக்கட்டுகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. [இ]

......

### சூறாவளி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

31 ஆயிரம் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டது.

**பால் உணவு விநியோகம்**

கூட்டுறவுக் கடைகள் மூலம் பால் உணவுபுதியதிட்டத்தில் கீழ் விநியோகம் செய்யப்படும் எனவும் அமைச்சர் கூறினார். (இ)

### இருவேளை உணவை நிறுத்தி... மாணவர்கள் முன்மாதிரி

[அரியாலை]

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினாலும் சூறாவளியினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும்வகையில் யாழ் பரியோவான் கல்லூரி விடுதி மாணவர்கள் தமது இருவேளை உணவை நிறுத்தி அதற்கான பணத்தை கல்லூரி அதிபர் திரு. ஜி. ஈ. ஆனந்தராசா மூலம் நிதிசேகரிப்புக் குழுவிடம் கையளித்தனர்.

மாணவ தலைவர்கள் வகுப்புகளுக்குச்சென்று மாணவர்களிடமிருந்து உடைகளைச் சேகரித்து வழங்கியதுடன், அதிபர் ஆசிரியர்களிடமிருந்து நிதிசேகரித்து நிதிசேகரிப்புக் குழுவிடம் கையளித்தனர்.

### கிழக்கிலங்கை சூறாவளி:

# இலங்கை இந்து மாமன்றம் நிதி சேகரிப்பு

(கொழும்பு)

"சூறாவளியினாலும் வெள்ளத்தினாலும் நாட்டின் பலபகுதிகளிலும் பாதிக்கப்பட்டு இன்னலுறுவோர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் தம்மாலியன்ற உதவிகளை வழங்க நடவடிக்கைகள் எடுத்துள்ளோம். இதற்குத் தங்களாலியன்ற பொருள், நிதி உதவிகளை பொதுச்செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம், 75 லொரன்ஸ்வீதி சரஸ்வதி மண்டபம், கொழும்பு, 4 என்ற விலாசத்திற்கு கூடிய விரைவில் அனுப்பிவைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம்" என்று அகில இலங்கை இந்துமாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

### நிதி உதவி அளிப்பீர்

(வவுனியா)

வெள்ளத்தினாலும் புயலினாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக பத்திரிகைகள் வாயிலாக திரட்டப்படும் நிதிக்கு ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற உதவிகளை வழங்குமாறு நீர்ப்பாசன நெடுஞ்சாலைகள் தொழிற்சங்கம் தமது அங்கத்தவர்களைக் கேட்டுள்ளது.

மட்டக்களப்பில் இம்மாதம் 15ம் திகதி நடைபெறவிருந்த சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் அதேதினத்தில் வவுனியா இந்து இளைஞர் மண்டபத்தில் நடைபெறும் என பொதுச்செயலாளர் செ. விஜயரத்தினம் அறிவித்துள்ளார். [அ]

### கூட்டணி மானிப்பாய் கிளை

தமிழர் விடுதலைக் கூட்டணி மானிப்பாய்க்கிளை சூறாவளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுமுகமாக நிதிசேகரித்து வருகிறது. திரு. சி.முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டணிக் கிளைக்கூட்டத்தில் புயலினாலும் வெள்ளத்தினாலும் உயிர்களையும் உடைமைகளையுமிழந்து நிர்க்கதியானவர்களுக்கும் அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### கூட்டுறவு ஊழியர்கள்

[யாழ்ப்பாணம்]

பாதிக்கப்பட்ட கிழக்கிலங்கை மக்களுக்காக சகல கூட்டுறவு ஊழியர்களும் தமதுஒருநாள் வேதனத்தை உதவு தொகையாக வழங்கி உதவுமாறு கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க செயலாளர் திரு. த இராசேந்திரம் சகல கூட்டுறவு ஊழியர்களையும் வேண்டியுள்ளார் [கெ]

### தெங்கு பனம்பொருள் சங்க ஊழியர்கள்

(யாழ்ப்பாணம்)

இயற்கையின் சீற்றத்தினால் பாதிப்புற்ற கிழக்கிலங்கை மக்களுக்கு இலங்கை தெங்கு, பனம்பொருள் சங்க ஊழியர்கள் ஒருநாள் ஊதியத்தை வழங்குவார்கள். இத்தொகை அகதிகள் புனர்வாழ்வுக் கழக தலைவர் திரு. கே. சி. நித்தியானந்தாவிடம் கையளிக்கப்படும். [செ]

# ஆசிரியர் சங்கம் மட்டுநகர் விரைவு

(யாழ்ப்பாணம்)

கிழக்கிலங்கையில் சூறாவளியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கான நிதியொன்றை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆரம்பித்துள்ளது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் யாழ் மாவட்டக் கிளை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களிலுள்ள இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க உறுப்பினர்கள் சங்க நிதிச் செயலாளருக்குத் தமது நன்கொடைகளை நேரடியாக அனுப்புமாறு பொதுச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கிடையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிதியிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கான உணவுவகைகளை எடுத்துக்கொண்டு சங்கக் குழுவொன்று மட்டக்களப்பு விரைந்துள்ளது

இக்குழுவில் பொதுச் செயலாளர் திரு ந பாலசுப்பிரமணியம், நிதிச் செயலாளர் திரு நா. நடராசா மற்றும் திரு தி. நடராசா, ஆ பொ. குலசிங்கம், திரு. த. காசிநாதன், திரு த மகாசிவம் ஆகியோர் இடம்பெறுகின்றனர். (கெ)

### அமெரிக்க

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

குவிந்துகொண்டிருக்கிறது.

**1 கோடி 20 லட்சம்**

ஐ நா முகவர் நிலையங்களும் தொண்டர் ஸ்தாபனங்களும் நேற்று ஒரு கோடி 20 லட்சம் ரூபாவை நிவாரணப் பணிகளுக்கு அனுப்பிவைத்தது.

லிபியா 15லட்சத்து 50ஆயிரம் ரூபாவையும், கொரிய குடியரசு ஒரு லட்சத்து 55ஆயிரம் ரூபாவையும், மாலைதீவு 10 ஆயிரம் ரூபாவையும் ஜனாதிபதி நிதிக்கு நேற்று வழங்கியது. [இ]

### இன்று மரம் நாட்டு விழா

[வேலணை]

வேலணை மேற்கு கிராம முன்னேற்றச் சங்கமும் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலை பெற்றோர்-ஆசிரியர் சங்கமும் இணைந்து இன்று வேலணை சைவப்பிரகாசவித்தியாசாலையில் மரம் நாட்டு விழாவொன்றினை வெகு சிறப்பாகக் கொண்டாடுகிறது.

### தவறவிடப்பட்டுள்ளது

நேற்றுக்காலை யாழ்தேவியில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த பிரயாணி ஒருவரின் முக்கிய பத்திரங்களடங்கிய தோற்பை யாழ். ரயில் நிலையத்தில் வைத்து தவறுதலாக எடுத்துச்செல்லப்பட்டுள்ளது எடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட முகவரியில் கொடுத்து தவுக. சி. சர்வானந்தன், ஓவசியர் ஒழுங்கை, தெல்லிப்பழை. 0957

### தவறிவிட்டது

சீக்கோ கைக்கடிகாரம் ஒன்று சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கும் மானிப்பாய் தபாற் கந்தோருக்கும் இடையில் தவறவிடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் விக்ரோறியாக் கல்லூரி அதிபரிடம் கொடுத்து சன்மானம் பெற்றுக்கொள்ளலாம். 0958

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978ம் ஆண்டு டிசம்பர் மாதம்2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu Telephone: 689, Registered as a Newspaper in SriLanka.